DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.54/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2
Defence
Court

Name : அமுதவள்ளி
Father/ Husband Name : ரெங்கசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.06.2025.

முதல்விசாரணை:- சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டையில் குடியிருந்து டெய்லாராக வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும், என் பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 07.12.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு சத்தம் கேட்டு நான் வந்தேன். அப்போது எதிர்த்த வீட்டில் உள்ள ரெக்ஸியும், ரெக்ஸியின் அம்மாவும் கடப்பா கல்லை எடுத்து வீசி அ.சா.1ஐ அடித்தார்கள். அ.சா.1க்கு இடது கை விரல், வலது கால் மற்றும் முதுகுப்பகுதியல் காயம் ஏற்ப்பட்டது. இராஜேஸ்வரி முன்னே சென்றார் நான் பின்னால் சென்றேன். ரெக்ஸியும், அவருடைய அம்மாவும் அ.சா.1ஐ பார்த்து எல்லோரும் வந்துவிட்டாததால் இன்னைக்கு நீ பிழைத்து விட்டாய் இன்னொரு நாள் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். இரத்தக் காயம் ஏற்படவும் அவரை இராஜேஸ்வரி மருத்துவமணைக்கு அழைத்துச் சென்றார். அன்று மாலை போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நானும், எதிரியும் பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் பேசிக்கொள்ள மாட்டோம். எனக்கும், எதிரிக்கும் சண்டை உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும் போது பார்க்கவில்லை என்றும் பின்பு சத்தம் கேட்டு தான் அந்த இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை, சம்பவம் நடக்கும் போதே சென்று விட்டேன். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் காலை 10.00 மணிக்கு சம்பவம் நடந்தது. எதுக்காக பிரச்சினை நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமணைக்கு செல்லவில்லை.

2. அ.சா.1க்கு எதிரிகள் கல் எறிந்ததால் காயம் ஏற்ப்படவில்லை என்றால் சரியல்ல, இடது கைவிரல் மற்றும் வலது காலில் காயம் ஏற்ப்பட்டது. மாலை போலீசார் விசாரிக்கும் போது கையெழுத்து ஏதும் போட்டேனா என்றால் இல்லை. எதிரிக்கும் அ.சா.1க்கும் ஏற்க்கனவே பிரச்சினை இருந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளால் அ.சா.1க்கு எந்த வித காயமும் ஏற்ப்படவில்லை என்றும் அ.சா.1 என் தோழி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அ.சா.1 சொல்லிக் கொடுத்தப்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.